**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 124/2024**

**Prosecution Witness 2 (LW 6)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.யோக மலர் | ஜாதி | : | -- |
| கணவர் பெயர் | : | முருகேசன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.01.2025

( எதிரிகள் ஆஜர்)

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு ஆதார் அட்டை மூலம் ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

முதல் விசாரணை

1. அ.சா.1 எனது கணவர் ஆவார். 1-வது எதிரியை தெரியும். அவர் எங்கள் வீட்டிற்கு அருகில் மூன்று வீடு தள்ளி குடியிருக்கிறார். நான் எனது கணவர் மற்றும் குழந்தைகளுடன் குடியிருந்து வருகிறோம். இந்த வழக்கு சம்பவத்தின் ஒரு வாரத்திற்கு முன்பாக எனக்கும் எனது கணவருக்கும் தகராறு ஏற்பட்டது. அப்பொழுது 1-வது எதிரி வந்து விலக்கி விட்டார். 1-வது எதிரி அப்பொழுது மது போதையில் தள்ளாடி இருந்தார். எங்கள் குடும்ப பிரச்சனையில் தலையிட வேண்டாம் என்று சொல்லி என் வீட்டுக்காரர் அவரை சற்று தள்ளி விட்டார். அவர் கீழே விழுந்து விட்டார்.

2. இரண்டு நாட்கள் கழித்து 1-வது எதிரிக்கு போன் செய்து தெரியாமல் நடந்து விட்டதாக சொன்னதாக என் கணவர் என்னிடம் சொன்னார். அதில் இருந்து அவர் என் கணவர் மீது கோபமாக இருந்தார். அதன் பிறகு 16.10.2023-ம் தேதி எனது தோழி எனக்கு சுமார் காலை 11.00 மணி அளவில் போன் செய்து உங்கள் வீட்டுக்காரருக்கு கை மற்றும் வலது பக்க தோள் பட்டை ஆகிய இடங்களில் இரத்தம் வருகிறது. அவரை போடி அரசு மருத்துவமனைக்கு கூட்டி செல்வதாக தகவல் சொன்னார்.

3. நானும், என் குடும்பத்தார்களும் அங்கு சென்றோம். என்ன என்று என்

வீட்டுக்காரரிடம் விசாரித்த போது 1–வது எதிரி வெட்டி விட்டதாக சொன்னார். என் வீட்டுக்காரர் ஆடை முழுவதும் இரத்தமாக இருந்தது. அங்கு சிகிச்சை முடித்து க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு மருத்துவ சிகிச்சை கொடுத்தார்கள். அங்கு போலீஸார் என் கணவரிடம் அன்று விசாரித்தார்கள். நான் உடன் தான் இருந்தேன். என் வீட்டுக் காரர் கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்து படித்து காண்பித்தார்கள். என வீட்டுக் காரருக்கு கட்டை விரலுக்கும், ஆள் காட்டி விரலுக்கும் இடையே ஆளமான காயம் இருந்ததால் இடது பெரு விரல் கைரேகை வைத்தார். போலீஸார் என்னை விசாரித்தார்கள். என் கணவர் கொடுத்த வாக்குமூலத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்தேன். அந்த சாட்சி கையெழுத்து அ.த.சா.ஆ.2 ஆகும்.

**எ.த.கு.வி: இல்லை. வழக்கறிஞர் ஆஜர்.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 24.01.2025 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S
Date: 2025.01.24 15:31:13 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.

24.01.2025.